சி.சி. எண்.71/2020 19 .10.2020

அ.சா.1 சாட்சி. திரு.பாலகிருஷ்ணன்

மு.விசாரணை.

நான் பழையசூரமங்கலம். எம்.ஜி.ஆர். நகாில் குடியிருந்து வெல்டிங்கு தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன கணேசன் என்னுடைய தம்பி. 17.12.2018-ம் தேதி இரவு 10 மணிக்கு அய்யந்துரை எனக்கு போன் செய்து வேலக்கவுண்டனூர் செங்கல் சூளை பஸ் ஸ்டாப் அருகே லாாி மோதி தலை, கை, கால்களில் பலத்த காயம் ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார். தகவல் கிடைத்ததும் நான் என் அண்ணன் சண்முகம் என்பவருக்கு தகவல் சொல்லிவிட்டு அங்கிருந்து மணிபால் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். கணேசனுக்கு தலையில் பலத்த அடிப்பட்டு இறந்து போகும் தருவாயில் இருந்தார். அங்கு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் படி பாிந்துரை செய்ததின் போில் அங்கு அழைத்து சென்றோம். அதிகாலை 3.00 மணி அளவில் மணிபால் மருத்துவமனையில் இருந்து அழைத்து சென்று சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்து விட்டோம். காலை 11.15 மணிக்கு சிகிச்சை பலனின்றி எனது தம்பி இறந்து விட்டார். நான் சேலம் அரசு மருத்துவமனையில் இருக்கும் போது போலீசார் வந்து விசாாித்தார்கள். நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாாில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் அ.த.சா.ஆ.1. போலீசார் என்னை விசாாித்தார்கள்.

எதிாி தரப்பில் குறுக்கு விசாரணை.

விபத்து குறித்து நேரடியாக எனக்கு எதுவும் தொியாது. நான் புகாரை என் கைப்பட எழுதி கொடுத்தேன். விபத்து குறித்து நான் தான் எழுதி கொடுத்தேன். போலீசார் சொல்லி எழுதவில்லை. எனது தம்பியின் வீடு மோட்டூாில் உள்ளது. எனது தம்பி வீட்டிற்கு செல்வதற்கு ஓமலூாில் இருந்து ரோட்டின் வடக்கு புறத்தில் தான் வரவேண்டும் என்றால் சாிதான். எனது தம்பியின் அஜாக்கிரதையினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சாியல்ல. விபத்திற்கும், எதிாிக்கும் எந்தவிதமான சம்மந்தம் இல்லை என்று சொன்னாலும், நஷ்டஈடு பெறுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சாியல்ல. நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், புகார் வாக்குமூலம் தான் கொடுத்துள்ளேன் என்றாலும் சாியல்ல.

மறு விசாரணை . இல்லை.

ஓம்/- பாலகிருஷ்ணன்

ஓம்/-ஆ.சீதாலெட்சுமி
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.